**FWC**

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Term Examination - 2022

பொருளியல் I
Economics I

Two Hours

Gr -13 (2022)

21 | T | I


**அறிவுறுத்தல்கள்:**

- ♣ *எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.*
- ♣ *விடைத்தாளில் மறுபக்கத்தில் உள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்து பின்பற்றுக.*
- ♣ *1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1),(2),(3),(4),(5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவதன் மூலம் காட்டுக.*

01. வரையறையற்ற மனித விருப்பங்களை தீர்மானிக்கும் காரணிகளுடன் தொடர்புபடாத விடயம் ஒன்று.
    1. சமூகச் சூழல்
    2. பிறப்பு, மத நம்பிக்கைகள் மற்றும் குடும்பப்பின்னணி போன்ற உள்ளார்ந்த விடயங்கள்
    3. பௌதீக மற்றும் பொருள் சார்ந்த தேவைகள்.
    4. சனத்தொகையின் வயதமைப்பு
    5. விளம்பரம் மற்றும் புத்தாக்கங்கள்.

02. பின்வருவனவற்றுள் எதனை பொருளாதாரப் பண்டத்தின் உடமையாகக் கருதுவீர்?
    1. பூச்சிய எல்லைச்செலவினையும் பூச்சிய அமையச் செலவினையும் கொண்டிருக்கும்.
    2. இயற்கையினால் நிரம்பல் தீர்மானிக்கப்படும்.
    3. நிரம்பல் வரையறுக்கப்பட்டிருப்பதுடன் வணிக மதிப்பினைக் கொண்டிருப்பதில்லை.
    4. நேரான எல்லைச்செலவினையும் பூச்சிய அமையச்செலவினையும் கொண்டிருக்கும்.
    5. வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு நிரம்பல் செய்யப்படுவதுடன் நேரான விலையையும் கொண்டிருக்கும்.


03. பின்வரும் உற்பத்தி சாத்திய வளையியில் எப்புள்ளி பூச்சிய வெளியீட்டு இடைவெளியைக் காட்டுகின்றது.
    1. A
    2. B
    3. C
    4. D
    5. E



04. பின்வருவனவற்றுள் எதனை கட்டளைப் பொருளாதாரத்தின் பண்பாகக் கருதமுடியும்?
1. ஊழியம் தவிர்ந்த ஏனைய காரணிகள் தனியார் உடமையாகக் காணப்படும்.
2. ஊழியம் உட்பட அனைத்துக் காரணிகளும் பொது அரசாங்கத்திற்கு சொந்தமாகக் காணப்படும்.
3. காரணிச் சந்தையிலும் பொருட்சந்தையிலும் தீர்மானிக்கப்படும் விலைகளின் தேவைகளைக் கருத்திற்கொண்டு திட்டமிடல் அதிகாரிகள் தீர்மானங்களை மேற்கொள்ளுவர்.
4. பிரதான பொருளாதார முகவர்கள் தனிப்பட்ட நலன்களை விட சமூக நலன்களில் அதிக கவனம் செலுத்துவர்.
5. இங்கு வணிகங்கள் இலாபம் ஈட்டும் நோக்கத்தோடும் தனிப்பட்ட நலன்களை மேம்படுத்தும் நோக்கத்தோடும் நடைபெறும்.

05. ஏனைய விடயங்கள் மாறாத நிலையில் இழிவுப்பண்டத்தின் விலை வீழ்ச்சியடையும் போது அதன் கேள்வித்தொகை அதிகரிப்பதற்குரிய காரணம்
1. மெய்வருமானத்தில் ஏற்படுகின்றது அதிகரிப்பினால் வருமான விளைவு நேராகக் காணப்படுதல்
2. சார்பு விலையில் ஏற்படுகின்ற அதிகரிப்பினால் பதிலீட்டு விளைவு நேராகக் காணப்படுதல்
3. மெய் வருமானத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பினால் கேள்வித்தொகை குறையும் அளவை விட சார்பு விலை வீழ்ச்சியினால் கேள்வித்தொகை பெரியளவால் அதிகரிக்கின்றமை.
4. வருமான விளைவு, பதிலீட்டு விளைவு இரண்டும் நேரானதாகக் காணப்படல்
5. மெய் வருமான அதிகரிப்பால் கேள்வித்தொகை அதிகரிப்பினை விட சார்பு விலை வீழ்ச்சியினால் ஏற்படுகின்ற கேள்வித்தொகை வீழ்ச்சி சிறியதாகக் காணப்படுதல்.

06. சம்பா அரிசிக்கான கேள்விக்கோடு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.




நுகர்வோர் சந்தையில் 200kg ஐ கொள்வனவு செய்யும் போது பயனின் அடிப்படையில் செலவு செய்யத் தயாராகவுள்ள பண அளவையும், நுகர்வோர் மிகையையும் சரியாக காட்டும் விடை எது?


| | பயனின் அடிப்படையில் செலவு செய்யத் தயாராகவுள்ள பண அளவு | நுகர்வோர் மிகை |
|---|---|---|
| 1. | ரூபா 75000 | ரூபா 10000 |
| 2. | ரூபா 30000 | ரூபா 30000 |
| 3. | ரூபா 40000 | ரூபா 30000 |
| 4. | ரூபா 80000 | ரூபா 10000 |
| 5. | ரூபா 40000 | ரூபா 10000 |

07. பண்டமொன்றின் நிரம்பல் கோட்டில் இடப்புற நகர்வுக்கு பொறுப்பாகயிருக்கும் காரணி ஒன்று?
1. பதிலீட்டு உற்பத்திகளின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி
2. உள்ளீட்டுப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி
3. உற்பத்தியில் கையாளப்படும் தொழிநுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றம்
4. தொழிலிற்குள் பல நிறுவனங்கள் இணைந்தமை
5. குறித்த பண்டத்தின் நிரம்பல் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள்.

08. கோதுமை மாவின் விலை கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 180 இலிருந்து 200 ஆக அதிகரித்த போது அதன் வாராந்த கேள்வித்தொகை 20 கிலோகிராமிலிருந்து 15 கிலோகிராமாக வீழ்ச்சியடைந்தது. கோதுமை மாவின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின் பெறுமதி யாது?
1. -3.33 2. -2.71 3. -0.27 4. -1.46 5. -1.0

09. திறன் தொலைபேசியின் (smart phone) வருமானம் சார் கேள்விநெகிழ்ச்சி 4.5 ஆகக் காணப்பட்டது. பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையானதாகக் காணப்படும்
1. ஏனையவை மாறாத நிலையில் அதன் விலை 20%த்தால் குறையும் போது கேள்வித்தொகை 9%த்தால் அதிகரிக்கும்.
2. வீட்டுத்துறையினருக்கு அத்தியாவசியப் பொருளாகக் காணப்படும்.
3. வீட்டுத்துறையின் வருமானம் 50%த்தால் அதிகரிக்கும் போது அதன் கேள்வியானது 225%த்தால் அதிகரிக்கும்.
4. நிலையான தொலைபேசியின் விலை 20%த்தால் அதிகரிக்கும் அதன் கேள்வி 50%த்தால் அதிகரிக்கும்
5. மின்கட்டணம் 30%த்தால் அதிகரிக்கும் போது அதன் கேள்வி 120%த்தால் குறையும்.

10. X என்ற பண்டத்தின் நிரம்பல் கோடு பின்வருமாறு தரப்பட்டுள்ளது. A என்ற புள்ளியில் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியின் பெறுமதி என்ன?
1. 3.0
2. 1.5
3. 4.5
4. 1.0
5. 0.5




11. Y என்ற நிரம்பல் சார்பு Qs=-1000+5p எனத் தரப்பட்டுள்ளது. இதன் உற்பத்தியாளர் 1000 அலகினை உற்பத்தி செய்து எல்லைச் செலவினைக் கருத்தில் கொள்ளாது அப்பண்டத்தினை நுகர்வோருக்கு 200ரூபா விலையில் விற்பனை செய்வதாகக் கருதவும் உற்பத்தியாளன் மிகை எவ்வளவாகக் காணப்படும்
1. ரூபா 200000 2. ரூபா 300000 3. ரூபா 100000
4. ரூபா -100000 5. ரூபா -200000

12. 2021ம் ஆண்டின் 1ம் காலாண்டில் தேங்காய்க்கான போட்டிச் சந்தையில் தேங்காய் ஒன்றின் சந்தை விலை ரூ70 ஆகவும் சந்தைத்தொகை 5000 தேங்காய்களாகவும் காணப்பட்டது. அதன் 2ம் காலாண்டில் தேங்காய் ஒன்றின் சந்தைவிலை ரூ90 ஆகவும் தொகை 5000 காய்களாகவும் காணப்பட்டது. இந்நிலமை பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் காணப்படும்.

| | தேங்காய்க்கான கேள்வி | தேங்காய்க்கான நிரம்பல் |
|---|---|---|
| 1. | அதிகரித்தல் | அதிகரித்தல் |
| 2. | குறைதல் | அதிகரித்தல் |
| 3. | அதிகரித்தல் | குறைதல் |
| 4. | குறைதல் | குறைதல் |
| 5. | அதிகரித்தல் | மாற்றமடையாது |

13. அத்தியாவசியப் பொருளொன்றின் மீது சிறப்பு வரி (அலகு வரி) விதிக்கப்படுவதுடன் அப்பொருளின் சந்தைக் கேள்வித் தொகையையும் வரிவிதிப்பின் முன்னரும் பின்னருமான சந்தை நிரம்பல் தொகையையும் பின்வரும் அட்டவணை காட்டுகிறது

| விலை (ரூ.) | கேள்வித் தொகை | வரி விதிப்பின் முன் நிரம்பல் தொகை | வரி விதிப்பின் பின் நிரம்பல் தொகை |
|---|---|---|---|
| 12 | 50 | 20 | 0 |
| 13 | 50 | 30 | 10 |
| 14 | 50 | 40 | 20 |
| 15 | 50 | 50 | 30 |
| 16 | 50 | 60 | 40 |

இத்தரவுகளின் படி சரியான கூற்று எதுவாகும்?

1. நுகர்வோரின் வரிச்சுமை 50 ரூபாவும் உற்பத்தியாளர் வரிச்சுமை 50 ரூபாவும் காணப்படும்.
2. வரிச்சுமை நுகர்வோரை விட உற்பத்தியாளர்களுக்கு அதிகமாகயிருக்கும்.
3. நுகர்வோரின் வரிச்சுமை 100 ரூபாவாகக் காணப்படும்.
4. நுகர்வோரின் வரிச்சுமை 400 ரூபாவாகவும் உற்பத்தியாளர் வரிச்சுமை 100 ரூபாவாகவும் காணப்படும்.
5. வரிச்சுமை விற்பனையாளர்களுக்கு மட்டுமே காணப்படும்.

14. X என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Qd = 600 - 10p$$

$$Qs = -200 + 10p$$

இப்பண்ட உற்பத்தியாளர்களுக்கு அரசு அலகுக்கு 20 ரூபாவை மானியமாக வழங்குவதாகக் கருதுக. மானியத்தின் பின் உற்பத்தியாளன் மிகை எவ்வளவாகக் காணப்படும்.?

1. 7500 ரூபா
2. 6000 ரூபா
3. 10000 ரூபா
4. 4500 ரூபா
5. 45000 ரூபா

15. அத்தியாவசியப் பண்டமொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்ச விற்பனை விலையை அரசாங்கம் நீக்கும் போது பின்வருவனவற்றுள் எது உண்மையாகயிருக்கும்?

1. அப்பண்டத்தின் கேள்வித்தொகையை அதிகரிக்கும்.
2. அப்பண்டத்தின் மிகைக்கேள்வியை அதிகரிக்கும்.
3. அப்பண்டத்தின் உற்பத்தியாளன் மிகையை அதிகரிக்கும்.
4. அப்பண்டத்தின் நுகர்வோர் செலவை அதிகரிக்கும்.
5. அப்பண்டத்தின் நிரம்பல் தொகையை குறைக்கும்.

16. ஒரு நிறைபோட்டிச் சந்தைக்கான கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளின் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுவதாக கருதுக.

கேள்வி $(Q_D) = 60 - 2P$ நிரம்பல் $(Q_S) = -20 + 3P$

மேலுள்ள சமன்பாடுகளில் என்பன முறையே கேள்வித் தொகையையும் நிரம்பல் தொகையையும் குறிப்பதோடு விலையினைக் குறிக்கின்றது. மேலும் அரசாங்கமானது இச்சந்தையில் விற்கப்படுகின்ற பொருளின் அலகொன்றிற்கு ‘ரூபா 20 இற்குச் சமமான ஒரு குறைந்தபட்ச விலையினை விதிப்பதாகக் கருதுக. இது,

1. சந்தையில் 20 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகை நிரம்பலிற்கு வழிவகுக்கும்.
2. சந்தையில் 28 அலகுகளுக்குச் சமமான ஒரு மிக நிரம்பலிற்கு வழிவகுக்கும்.
3. சந்தையில் 28 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகைக்கேள்விக்கு வழிவகுக்கும்.
4. சந்தையில் 20 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகைக்கேள்விக்கு வழிவகுக்கும்.
5. சந்தையில் எவ்வித தாக்கத்தினையும் ஏற்படுத்த மாட்டாது.

17. X என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$Qdx = 500-10Px$ $Qsx = -100+10Px$

அரசாங்கம் X பண்டத்தின் உற்பத்தியாளர்கள் நலன்கருதி உத்தரவாத விலையாக ரூபா 50 ஐ நிர்ணயித்துள்ளதாகக் கருதுக. அவ்விலையை செயற்றிறனாக்குவதற்கு அரசு குறை நிரப்பு கொடுப்பனவு திட்டத்தினை அமுல்படுத்தினால் ஏற்படும் ஈடுசெய்ய முடியாத இழப்பு எவ்வளவு?

1. ரூ 16000 2. ரூ 20000 3. ரூ 1600 4. ரூ 4000 5. ரூ 40000

18. பண்டத்திற்கான கேள்விச்சார்பு $Qd = 100 -5P$ ஆகவும் நிரம்பல் $Qs = -20+5P$ ஆகவும் தரப்படுகிறது. அரசாங்கம் ரூ 15 ஐ குறைந்த பட்ச விலையாக நிர்ணயித்து மிகையினை கொள்வனவு செய்யுமாயின் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்பு (DWL) எவ்வளவு?

1. ரூ45 2. ரூ75 3. ரூ82
4. ரூ450 5. ரூ302.5

19. சீரற்ற காலநிலையினால் வாழைப்பழத்தின் அறுவடை வீழ்ச்சியடைந்த போதிலும் வாழைப்பழச் செய்கையாளர்களின் வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. இம்மாற்றத்திற்கு பொருத்தமான காரணி எது?

1. வாழைப்பழத்தின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகக் காணப்படல்
2. வாழைப்பழத்தின் விலைசார் கேள்வி ஒருமையுள்ளதாகக் காணப்படல்
3. வாழைப்பழத்தின் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியுள்ளதாகக் காணப்படல்
4. வாழைப்பழத்தின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியற்றதாகக் காணப்படல்.
5. வாழைப்பழத்தின் விலைசார் கேள்வி பூரண நெகிழ்வுள்ளதாகக் காணப்படல்

20. ஒரு நிறுவனம் குறுங்காலத்தில் இயங்கும்போது,

1. அதன் மொத்தச் செலவும் மொத்த மாறும் செலவும் ஒரேயளவாக இருக்கும்.
2. வெளியீடு அதிகரிக்கும்போது சராசரி நிலையான செலவு அதிகரிக்கும்.
3. நிலையான உள்ளீடுகளின் அளவினை மாற்றியமைக்க முடியாது.
4. அது தனது மாறும் செலவுகளை மாற்றியமைக்க முடியாது.
5. மொத்தச் செலவுகள் மொத்த வருவாயைவிட உயர்வாக இருக்கும்.

21. குறுங்காலத்தில் A என்ற உற்பத்தி நிறுவனம் ஆடை உற்பத்தியில் ஈடுபடுவதாகக் கருதவும். அந்நிறுவனம் 100 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திய போது ஊழியத்தின் சராசரி உற்பத்தியும் எல்லை உற்பத்தியும் 50 ஆடைகளாகக் காணப்பட்டது. அவ் வெளியீட்டில் பின்வருவனவற்றுள் எது உண்மையாகக் காணப்படும்?

1. இந்நிறுவனத்தின் மொத்த உற்பத்தி உச்ச நிலையில் காணப்படும்
2. இந்நிறுவனத்தின் எல்லை உறபத்தி உச்ச நிலையில் காணப்படும்
3. இந்நிறுவனத்தின் சராசரி உற்பத்தி வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும்.
4. இந்நிறுவனத்தின் சராசரி மாறும் செலவும் எல்லைச் செலவும் சமமாகக் காணப்படும்
5. இந்நிறுவனத்தின் சராசரி மாறும் செலவினை விட எல்லைச் செலவு உயர்வாகக் காணப்படும்.

22. குறுங்கால உற்பத்தி நிறுவனத்தின் செலவுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

A - ஆதனவரி
B - காப்புறுதி தவணைக் கட்டணம்
C - நாளாந்த வேலையாட்களின் சம்பளம்
D - தரகுக் கட்டணம்
E - மூலப்பொருள் கொள்வனவுகள்
F - உயர் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்படும் பணியாளர்களுக்கான சம்பளம்
G - நாளாந்த போக்குவரத்துச் செலவுகள்
H - கடன் மூலதனத்திற்குரிய வட்டி

மேலே தரப்பட்டுள்ளவற்றில் நிறுவனத்தின் மாறும் செலவுக்குள் உள்ளடங்கும் விடயங்களை சரியாக வெளிப்படுத்துவது

1. A, B, D, G 2. B, C, D, E 3. C, D, E, G
4. B, C, E, G 5. A, B, F, H

23. நிறுவனமொன்று தன்னுடைய சகல உள்ளீடுகளையும் 60 அலகிலிருந்து 72 அலகுகளாக அதிகரித்த போது வெளியீட்டு மட்டம் 500 அலகிலிருந்து 550 அலகுகளாக அதிகரித்ததாக கருதவும் இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது
   1. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி தொழிற்படுகின்றது.
   2. அதிகரித்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி தொழிற்படுகின்றது.
   3. அளவுத்திட்ட சிக்கனத்தினை நிறுவனம் கொண்டிருக்கும்.
   4. மாறா அளவுத்திட்ட விளைவு விதி தொழிற்படுகின்றது.
   5. அளவுத்திட்ட சிக்கனமின்மையை நிறுவனம் கொண்டிருக்கும்.

24. பின்வருவனவற்றுள் எது நிறைபோட்டித் தொழிலுடன் இசைவானது?
   1. தொழிலில் குறைந்த எண்ணிக்கையிலான நிறுவனங்கள் காணப்படும்.
   2. தொழிலுள்ள ஒவ்வொரு நிறுவனமும் வேறாக்கமான பொருளை உற்பத்தி செய்யும்.
   3. தொழில் தொடர்பான தகவல்களை கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் செலவில்லாமல் பெற்றுக்கொள்ள முடியும்.
   4. தொழிலில் தனித்தன்மை வாய்ந்த பொருள் காணப்படும்.
   5. தொழில் எதிர்கொள்ளும் கேள்விக்கோடு பூரண கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.

25. பின்வருவனவற்றுள் எதனை இலங்கையில் சிலருரிமைச் சந்தைக்குரிய உதாரணமாக கருதுவீர்?
   1. இலங்கை மின்சார சபை
   2. பெற்றோல் சில்லறை விற்பனை.
   3. சம்பா அரிசியின் சில்லறை விற்பனை
   4. தனியார் கல்வி நிறுவனச்சேவை.
   5. பூசணியின் மொத்த சில்லறை விற்பனை.

26. நிறைபோட்டி நிறுவனமொன்று A என்ற பண்டத்தினை ரூ 40 என்ற விலையில் 400 அலகுகளை வெளியீடு செய்கின்றது. அந்நிறுவனத்தின் பொருளியல் இலாபம் ரூபா 2000 ஆகவுள்ளது. அந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு ரூபா 4000 ஆகவுள்ளதாகவும் கருதுக. இந்நிறுவனத்தின் சராசரி மாறும் செலவு சராசரி மொத்தச் செலவுகள் எவ்வாறு இருக்கும் ?

| | சராசரி மாறும் செலவு | சராசரி மொத்தச் செலவு |
|---|---|---|
| 1. | ரூபா 25 | ரூபா 35 |
| 2. | ரூபா 25 | ரூபா 40 |
| 3. | ரூபா 40 | ரூபா 25 |
| 4. | ரூபா 10 | ரூபா 40 |
| 5. | ரூபா 25 | ரூபா 15 |

27. நிறைபோட்டி நிறுவனமொன்றின் உற்பத்திப்பொருள் தொடர்பான தகவல்கள் வருமாறு

| பண்டத்தின் விலை (P) (ரூபாவில்) | உற்பத்தித் தொகை (Q) (அலகுகள்) | மொத்த மாறும் செலவு (TVC) (ரூபாவில்) |
|---|---|---|
| 20 | 50 | 5000 |
| 20 | 100 | 5500 |
| 20 | 150 | 6500 |
| 20 | 200 | 8000 |
| 20 | 250 | 10000 |

இந்நிறுவனத்தின் இலாபத்தினை உச்சப்படுத்தும் / நட்டத்தினை இழிவுபடுத்தும் வெளியீட்டு மட்டம் எவ்வளவாகக் காணப்படும்.
   1. 50 அலகுகள்
   2. 100 அலகுகள்
   3. 150 அலகுகள்
   4. 200 அலகுகள்
   5. 250 அலகுகள்

28. அரசாங்கத் துறையும் சர்வதேச வர்த்தகமும் அற்ற ஒரு பொருளாதாரத்தின் வருமானச் சுற்றோட்ட மாதிரியில் வீட்டுத்துறையானது.
   1. முடிவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வோரிடமிருந்து வருமானத்தைப் பெறும்.
   2. பொருள் சந்தையில் வளங்களின் விற்பனையின் மூலம் வருமானத்தைப் பெறும்.
   3. வணிக நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துவதற்காக அந் நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு செய்யும்.
   4. தமது உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தியமைக்காக உற்பத்தியாளர்களிடமிருந்து வருமானத்தைப் பெறும்.
   5. சேமிப்புகளைப் பயன்படுத்தியமைக்காக உற்பத்தியாளர்களுக்கு வருமானங்களைக் கொடுப்பனவு செய்யும்.

29. பின்வருவனவற்றுள் எது பொருளாதார மந்தத்துடன் (Depression) தொடர்புடைய சரியான கூற்றாகும்.
   1. மொத்தக் கேள்வியானது அதிகரித்து பொதுவிலைமட்டத்தினையும் உயர்த்தும்
   2. கைத்தொழில்களில் மிகை உற்பத்தி இயலளவு காணப்படும்.
   3. உயர்ந்தமட்ட வேலையின்மை நிலவுவதுடன் மொத்த சில்லறை வியாபார நடவடிக்கைகள் உயர்ந்த மட்டத்தில் காணப்படும்.
   4. நேர்க்கணிய வெளியீட்டு இடைவெளி உயர்வாகக் காணப்படும்.
   5. அரசின் வரி வருமானங்கள் உயர்வாயிருப்பதுடன் அரசின் மொத்தச் செலவீனங்கள் தாழ்வாகவும் காணப்படும்.

30. நாட்டிலுள்ள ஆடைத்தொழிற்சாலைகள் பின்வரும் எந்நிறுவன அலகுக்குள் உள்ளடக்கப்படும்?
   1. நிதிக் கூட்டுத்தாபனம்.
   2. பொது அரசாங்கம்.
   3. குடும்ப அலகுகள்.
   4. வீட்டுத்துறைக்கு சேவை வழங்கும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள்.
   5. நிதி நிறுவனமல்லாக் கூட்டுத்தாபனம்.

31. ஒரு நாட்டின் இறுதி நுகர்வுச் செலவுக்குள் **உள்ளடங்காத** விடயம் எது?
   1) ஒரு குடும்பம் ரூபா 50000இற்கு புதிய ஆடைகளை கொள்வனவு செய்தல்
   2) அரசாங்கம் தன் பணியாளர்களுக்கு வழங்கும் சம்பளம்
   3) ஒரு குடும்பம் தன் உணவுத்தேவைக்காக மாதாந்தம் 30000 ரூபாவை செலவு செய்தல்
   4) ஒரு குடும்பம் தன் குடியிருப்புக்காக 10 மில்லியன் ரூபா செலவில் புதிய வீடொன்றை அமைத்தல்
   5) ஒரு குடும்பம் தமது போக்குவரத்துத் தேவைக்காக 05 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய கார் ஒன்றினை கொள்வனவு செய்தல்.

32. பொருளாதாரமொன்றின் நுகர்வுச்சார்பு $C=400+0.8yd$ எனத்தரப்பட்டுள்ளது. பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையானதாகக் காணப்படும்.
   1. எல்லா செலவிடத்தக்க வருமானத்திலும் சராசரி நுகர்வு நாட்டம் எல்லை நுகர்வு நாட்டப் பெறுமதிக்கு சமனாகக் காணப்படும்.
   2. செலவிடத்தக்க வருமானம் அதிகரிக்கும் போது எல்லை நுகர்வு நாட்டப் பெறுமதி வீழ்ச்சியடையும்.
   3. செலவிடத்தக்க வருமானம் 5000 மில்லியன் ரூபாவாகவுள்ள போது சராசரி நுகர்வு நாட்டப் பெறுமதியும் எல்லை நுகர்வு நாட்டப் பெறுமதியும் சமனாகக் காணப்படும்.
   4. செலவிடத்தக்க வருமானம் 5000 மில்லியன் ரூபாவானது 8000 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கும் போது சராசரி நுகர்வு நாட்டப் பெறுமதி வீழ்ச்சியடையும்
   5. செலவிடத்தக்க வருமானம் 8000 மில்லியன் ரூபாவிலிருந்து 10000 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கும் போது சராசரி நுகர்வு நாட்டம் எல்லை நுகர்வு நாட்டப் பெறுமதிகள் இரண்டும் வீழ்ச்சியடையும்.

33. வருமானமட்டம் ரூ.5000 இலிருந்து ரூ.10000 ஆக அதிகரிக்கும்போது நுகர்வுச் செலவீடானது ரூ.7000 இலிருந்து ரூ.11000 ஆக அதிகரிக்கின்றது. இந்நிலையில் வருமானப் பெருக்கியின் பெறுமதி யாது?
1. 0.8 ஆகும் 2. 4.0 ஆகும் 3. 2.5 ஆகும்
4. 5.0 ஆகும் 5. 1.25 ஆகும்

34. அரச துறையற்ற ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தில் மொத்த சேமிப்புச் சார்பு S=-100+0.2Y ஆகவும், சமநிலைத் தேசிய வருமான மட்டம் ரூபா 2000 பில்லியனாகவும் உள்ளதாகக் கருதுக. இப் பொருளாதாரத்தின் முதலீட்டு மட்டம் யாது?
1. ரூபா 100 பில்லியனாகும்.
2. ரூபா 200 பில்லியனாகும்.
3. ரூபா 300 பில்லியனாகும்.
4. ரூபா 400 பில்லியனாகும்.
5. ரூபா 500 பில்லியனாகும்.

35. வெளிநாட்டுத் துறையற்ற பொருளாதாரமொன்றில் நுகர்வு (C), முதலீடு (I), அரசாங்க கொள்வனவுகள், வரிகள் என்பவற்றின் பெறுமதிகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.
C = 200 + 0.8yd, 1 = 300, G = 200, T = 50
இப்பொருளாதாரத்தின் சமநிலை மட்டத் தேசிய வருமானம் (y) யாது?
1. 300 2. 3300 3. 3500 4. 3200 5.6000

36. பெருக்கிகளுக்கு இடையிலான பின்வரும் தொடர்புகளில் எது தவறானது?
1. அரச செலவு பெருக்கி > வரிப் பெருக்கி > சமநிலை வரவு செலவுத்திட்டப் பெருக்கி
2. அரச செலவுப் பெருக்கி + வரிப்பெருக்கி = சமநிலை வரவுசெலவுத்திட்டப் பெருக்கி
3. அரச செலவுப் பெருக்கி = முதலீட்டுப் பெருக்கி > வரிப்பெருக்கி
4. சமநிலை வரவுசெலவுத்திட்டப் பெருக்கி < வரிப்பெருக்கி > அரச செலவுப் பெருக்கி
5. சமநிலை வரவுசெலவுத்திட்டப் பெருக்கி - வரிப்பெருக்கி = அரச செலவுப் பெருக்கி

37. கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் அரசாங்க கொள்வனவுகள்(G) ரூபா 500 பில்லியன் வரிகள் (T) ரூ200 பில்லியன், தனியார் சேமிப்பு (s) ரூ 250 பிலலியன் தனியார் முதலீடுகள் (I) ரூ 300 பில்லியன் ஆக உள்ளதெனக் கருதுக. இப் பொருளாதாரத்தின் தேறிய ஏற்றுமதிகளின் பெறுமதி யாது?
1. ரூபா 300 பில்லியன் 2. ரூபா 350 பில்லியன் 3. ரூபா -450 பில்லியன்
4. ரூபா -800 பில்லியன் 5. ரூபா -350 பில்லியன்

38. ஒரு பொருளாதாரம் தற்போது ரூபா 6000 பில்லியன் சமநிலை வெளியீட்டு மட்டத்தில் இயங்குவதாகவும் அதன் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 எனவும் கொள்க. இப்பொருளாதாரத்தின் நிறைதொழில் வெளியீட்டு மட்டச் சமநிலை ரூபா 7500 பில்லியன் ஆயின், பின்வரும் கொள்கைத் தீர்வுகளில் எது நிறைதொழில்மட்டம் எய்தப்படுவதை உறுதி செய்யும்?
1. வரிகளை ரூபா 200 பில்லியனால் குறைத்தல்.
2. அரசாங்கச் செலவீடுகளை ரூபா 1500 பில்லியனால் அதிகரித்தல்.
3. அரசாங்கச் செலவீடுகளை ரூபா 375 பில்லியனால் அதிகரித்தல்.
4. வரிகளை ரூபா 300 பில்லியனால் குறைத்தல்.
5. வரிகளை ரூபா 375 பில்லியனால் குறைத்தல்.

39. ஒரு பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் உள்ள நிலைமையை இனங்காண்க.

1. பண்டங்கள் நேரடியாகப் பண்டங்களுடன் மாற்றப்படுவதில்லை.
2. பண்டமாற்று ஊடகமாக அல்லாது பணம் ஒரு பெறுமானத்திரட்டாகப் பயன்படுகின்றது.
3. மாற்றுதலில் இருசாராருடைய தேவைகளும் ஒத்துச் செல்லுதல் வேண்டும்.
4. கடதாசிப்பணம் இல்லாததால் பவுண், தங்கம் போன்ற மிகவும் மதிப்புள்ள உலோகங்கள் பண்டமாற்று ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
5. இங்கு கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டு அதிக காலத்தை செலவிட வேண்டியிருக்கவில்லை.

40. கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் பயன்படுத்துகின்ற சாதனங்கள் சில தரப்பட்டுள்ளது?

A. தாள் நாணயங்கள்

B. கேள்வி வைப்புக்கள்

C. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியிலுள்ள சேமிப்பு வைப்புக்கள்

D. திறைசேரி முறிகள்

E. கடன் அட்டைகள்

F. நிதிக்கம்பனியிலுள்ள தவணை வைப்புக்கள்

மேலுள்ளவற்றுள் கிட்டிய பணத்திற்குள் உள்ளடங்குபவற்றை சரியாகக் காட்டுவது?

1. A,C,D  2. B,C,F  3. A,E,F  4. D,E,F  5. C,D,F

41. இலங்கையின் நாணயக் கூட்டுக்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| விடயம் | பெறுமதி (பில்லியன் ரூபாவில்) |
|---|---|
| • பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயம் | 550 |
| • வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் கேள்வி வைப்புக்கள் | 350 |
| • சீராக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்கள் | 600 |
| • வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம் | 400 |
| • வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்கள் | 4000 |

மேலுள்ள தகவல்களின் படி வெளிநிற்கும் நாணயத்தின் பெறுமதியையும் குறுகிய பணநிரம்பலையும் சரியாகக் காட்டும் விடை எது?

1. 900 பில்லியன் ரூபா, 900 பில்லியன் ரூபா
2. 4550 பில்லியன் ரூபா, 1300 பில்லியன் ரூபா
3. 1000 பில்லியன் ரூபா, 4000 பில்லியன் ரூபா
4. 950 பில்லியன் ரூபா, 900 பில்லியன் ரூபா
5. 1300 பில்லியன் ரூபா, 550 பில்லியன் ரூபா

42. பின்வருவனவற்றுள் எது ஒதுக்குப் பணத்தில் அதிகரிப்பை ஏற்படுத்த வல்லது?
1. பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயத்தின் அளவில் ஏற்படும் வீழ்ச்சி
2. வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயத்தின் அளவில் ஏற்படும் வீழ்ச்சி
3. வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி வழங்கிய கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு
4. மத்திய வங்கி அரசுக்கு வழங்கிய கடன்களில் ஏற்பட்ட வீழ்ச்சி
5. மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புகளில் ஏற்பட்ட வீழ்ச்சி

43. பணவீக்கம் நிலவும்போது
1. பொருளாதாரத்தில் விலைகள் வீழ்ச்சியடையும்.
2. பொருளாதாரத்தில் பணத்தின் பெறுமதி வீழ்ச்சியடையும்.
3. வெளிநாட்டு நாணயச் சந்தையில் உள்ளூர் நாணய அலகின் பெறுமதி அதிகரிக்கும்.
4. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருள்கள் சேவைகள் மலிவானதாக மாறும்.
5. மெய்வட்டி வீதங்கள் உயரும்.

44. பின்வரும் அட்டவணை தெரிவுசெய்யப்பட்ட சில பொருளாதார மாறிகளைச் சுட்டெண்களின் வடிவில் தருகிறது.

| வருடம் | பணக்கையிருப்பு (M) | சுற்றோட்ட வேகம் (V) | விலை மட்டம் (P) | மெய் உள்நாட்டு உற்பத்தி (T) |
|---|---|---|---|---|
| 1 | 150 | 20 | 15 | 200 |
| 2 | 200 | 20 | ? | 200 |

வருடம் 2 இல் விலைமட்டத்திற்கான சுட்டெண் யாது?
1. 20 2. 200 3. 50 4. 100 5. 40

45. இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் நாணயக் கொள்கையின் இறுதிக்குறிக்கோள் யாது?
1. வருமான ஏற்றத்தாழ்வை நீக்குதல்
2. விலை உறுதியைப் பேணுதல்
3. நிதியியல் முறை உறுதியைப் பேணுதல்
4. உள்ளக வெளியகச் சமநிலையை பேணுதல்
5. விலை மற்றும் பொருளாதார உறுதியை பேணுதல்

46. திறந்த சந்தையில் அரச முறிகளைக் விற்பனை செய்யும் மத்திய வங்கியின் நடவடிக்கை காரணமாக
1. வங்கிகளின் ஒதுக்குகள் அதிகரித்து பண அடித்தளம் விரிவடையும்.
2. வங்கிகளின் ஒதுக்குகள் விழ்ச்சியடைந்து பண அடித்தளம் சுருக்கமடையும்.
3. வங்கிகளின் ஒதுக்குகள் அதிகரித்து பண அடித்தளம் சுருக்கமடையும்.
4. வங்கிகளின் ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்து பண அடித்தளம் விரிவடையும்.
5. வங்கிகள் மிகை ஒதுக்குகளைக் கொண்டிருப்பின் வங்கிகளின் ஒதுக்குகள் வீழ்ச்சியடையும் ஆனால் பணநிரம்பல் அதிகரிக்கும்.

47. வணிக வங்கியொன்றில் கேள்வி வைப்புக்கள் 50000 ரூபாவாகவும் ஒதுக்குகள் 8000 ரூபாவாகவும் கடன்கள் 42000 ரூபாவாகவும் காணப்பட்டது. நியதி ஒதுக்கு தேவை 0.1 எனக்கருதுக. இவ்வங்கியில் வாடிக்கையாளர் ஒருவர் தனது நடைமுறைக்கணக்கில் 10000 ரூபாவை புதிதாக வைப்பிலிடும் போது சட்டரீதியான ஒதுக்கு, மிகைஒதுக்கு எவ்வளவால் அதிகரிக்கும்.

| | சட்டரீதியான ஒதுக்கு | மிகை ஒதுக்கு |
|---|---|---|
| 1. | 10000 ரூபாவால் அதிகரிக்கும் | 10000 ரூபாவால் அதிகரிக்கும் |
| 2. | 10000 ரூபாவால் அதிகரிக்கும் | 9000 ரூபாவால் அதிகரிக்கும் |
| 3. | 6000 ரூபாவால் அதிகரிக்கும் | 9000 ரூபாவால் அதிகரிக்கும் |
| 4. | 5000 ரூபாவால் அதிகரிக்கும் | 10000 ரூபாவால் அதிகரிக்கும் |
| 5. | 1000 ரூபாவால் அதிகரிக்கும் | 9000 ரூபாவால் அதிகரிக்கும் |

48. பின்வரும் நிகழ்வுகளில் எது சந்தைத்தோல்வியை ஏற்படுத்தும்?
1. சமூக எல்லை நன்மைக்கேற்ப மேன்மைப் பணடங்களை உற்பத்தி செய்தல்
2. வெளிவாரி விளைவுகளை கருத்தில் கொண்டு சந்தை நடவடிக்கையாளர்கள் சந்தைச்செயற்பாட்டில் ஈடுபடுதல்
3. நிறைபோட்டிச்சந்தை செயற்பாடுகளின் கீழ் உற்பத்தி நுகர்வுகளுக்குரிய சாதன ஒதுக்கீடு நிகழுதல்
4. சமூகம் விரும்பும் அளவுக்கு பொதுப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுதல்
5. நிறைவில் போட்டிச் சந்தை செயற்பாடுகளின் கீழ் உற்பத்தி நுகர்வுகளுக்குரிய சாதன ஒதுக்கீடு நிகழுதல்

49. A - வீதி சமிக்ஞைகள்    B - உல்லாச கடற்கரை
C - அறிவு உருவாக்கம்    D - பெருந்தெருக்கள்
E - மோட்டார் கார்    F - வானிலை எதிர்வுகூறல்கள்

மேலே தரப்பட்டுள்ளவற்றில் பொதுப்பண்டத்தினை உள்ளடக்கிய சரியான விடை எது?
1. A, D, F 2. B, C, F 3. A, B,D 4. A, C, F 5. D, E, F

50 2020இல் இலங்கையில் வரி வருவாயின் பிரதான மூலாதாரங்களாக அமைவன?
1. உற்பத்திவரிகள், வருமான வரி மற்றும் பெறுமதிசேர்வரி.
2. பெறுமதிசேர்வரி, புரள்வுவரி மற்றும் பொருளாதாரச் சேவைக் கட்டணங்கள் ஆகும்.
3. வருமானவரி, பெறுமதிசேர்வரி, முத்திரைக் கட்டணங்கள் ஆகும்.
4. பெறுமதிசேர்வரி, வருமான வரி மற்றும் உற்பத்தி வரிகள்.
5. பெறுமதிசேர் வரி, துறைமுக மற்றும் விமானநிலையக் கட்டணங்கள் மற்றும் பொருளாதார சேவை கட்டணங்கள் ஆகும்.

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் II<br>Economics II | Three Hours and ten minutes<br>Gr -13 (2022) | 21 | T | II |

பகுதி II

**அறிவுறுத்தல்** : உபபிரிவு "**அ**", உபபிரிவு "**ஆ**" ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**உப பகுதி - 'அ'**

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

01.

i. இலங்கையின் உலர்வலயப் பிரதேசமொன்றில் 100 ஏக்கர் காட்டுப்பிரதேசம் அழிக்கப்பட்டு அந்நிலத்தில் இயற்கை முறையில் உப உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதாக கருதவும். அவ் உற்பத்திக்கு இயற்கை வனத்திலுள்ள விலங்குகளின் செயற்பாடுகள் இடையூறாக இருப்பதனால் அதிகரித்த மக்களின் உணவுத் தேவைக்கேற்ப அவ் உற்பத்திகளின் அளவு குறைவாகவும் காணப்படுவதாகக் கருதவும். இச் சம்பவத்தின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

அ. அருமை, பற்றாக்குறை என்பவற்றினை வேறுபடுத்துக.

**(02 புள்ளிகள்)**

ஆ. "காட்டு விலங்குகள்" எவ்வகையான பொருளாதார வளமாகக் கருதப்படும்? அதன் இரண்டு பொருளியல் பண்புகளைக் குறிப்பிடுக.

**(03 புள்ளிகள்)**

இ. "உப உணவுப்பொருட்கள்" எவ்வகையான பண்டமாகக் கருதப்படும்? அவற்றின் நான்கு பிரதான உடமைகளைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

ii. தாராள சந்தைப் பொருளாதாரத்திலிருந்து சமூக சந்தைப் பொருளாதாரம் எவ்வாறு வேறுபடுகின்றது?

**(04 புள்ளிகள்)**

iii. ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையியில் அசைவினை ஏற்படுத்தும் காரணிகள் மூன்றினை வரைபின் மூலம் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

02.

i. அன்ரன் குடும்பத்தின் மாதாந்த பண வருமானம் 50000 ரூபாவாகும். அக்குடும்பம் தம் வருமானத்தில் 5000 ரூபாப் பணத்தினை நாட்டரிசிக்காகவும், சம்பா அரிசிக்காகவும் செலவிடுகின்றது. நாட்டரிசி, சம்பா அரிசி என்பவற்றின் விலைகள் kg ஒன்றிற்கு முறையே ரூபா.100, ரூபா.150 ஆகக் காணப்பட்டது. அவ் அரிசிகளின் கேள்வித்தொகை தலா மாதம் ஒன்றுக்கு 20 கிலோகிராமாகக் காணப்பட்டது. ஏனையவை மாறாத நிலையில் நாட்டரிசியின் விலைமட்டும் 200ரூபாவாக அதிகரித்தபோது அதன் கேள்வித்தொகை மாதமொன்றுக்கு 08 கிலோகிராமாக குறைந்தது எனவும் கருதுக.

அ. நாட்டரிசியின் விலை அதிகரித்தபோது அதன் கேள்வித்தொகை வீழ்ச்சியடைந்தமைக்குரிய காரணங்கள் தெளிவுபடுத்துக.

**(04 புள்ளிகள்)**

ஆ. நாட்டரிசி சாதாரண பண்டமா / இழிவுப்பண்டமா எனக் குறிப்பிட்டு விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. இலங்கையின் நெல்சந்தையில் இயற்கைக் காரணிகளின் தாக்கத்தினால் நெல்லின் நிரம்பல் வீழ்ச்சியடைந்தது. அதன் நிரம்பல் வீழ்ச்சியில் செல்வாக்கு செலுத்தக்கூடிய வேறு காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

iii. புள்ளிக் கேள்வி நெகிழ்ச்சி, வில் கேள்வி நெகிழ்ச்சி இரண்டினையும் தெளிவாக வேறுபடுத்துக.

**(04 புள்ளிகள்)**

iv. இலங்கையின் “பால்மா” சந்தையில் கேள்வி வீழ்ச்சியடைந்த போதிலும் பால்மாவின் விலை இருமடங்கிற்கு மேல் அதிகரித்துக் காணப்பட்டது. இத்தகைய நிலைமை எப்போது நிகழும் என்பதனை கேள்வி, நிரம்பல் பகுப்பாய்வுக்குட்படுத்தி பொருத்தமான வரைபின் மூலம் விளக்குக.

**(04 புள்ளிகள்)**

03.

i. நுகர்வோன் மிகை என்றால் என்ன? அம்மிகை பூச்சியமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தினை வரைபின் மூலம் வெளிப்படுத்துக.

**(04 புள்ளிகள்)**

ii. அரசாங்கம் பாற்பண்ணை தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மானியத்தினை வழங்கும்போது ஈடுசெய்ய முடியாத நலன் இழப்பு (Dead wel fare loss) ஏற்படுவதனை வரைபின் மூலம் விளக்குக.

**(04 புள்ளிகள்)**

iii. அரசாங்கம் பண்ட உற்பத்தியாளர்கள் மீது வரி விதிக்கும்போது வள ஒதுக்கீட்டு வினைத்திறனை பாதிக்காத இரு சந்தர்ப்பங்களை வரைபின் மூலம் விளக்குக.

**(04 புள்ளிகள்)**

iv. X எனும் பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$Qd = 600-P$ $\qquad$ $Qs = -300 +4P$

P= அலகொன்றின் விலை ரூபாவில். $\qquad$ Q= தொகை அலகுகளில்

இப்பண்டத்தின் இழிவளவான விலையாக அரசு 250 ரூபாவை நிர்ணயித்துள்ளதாகக் கருதவும். அவ்விலையில்.

அ. நுகர்வோர் மிகை எவ்வளவு? **(01 புள்ளி)**

ஆ. உற்பத்தியாளர் மிகை எவ்வளவு? **(02 புள்ளிகள்)**

இ. தேறிய சமூக நலன் இழப்பு எவ்வளவு? **(01 புள்ளி)**

v. விவசாய விளைபொருட்களின் நிரம்பல் வீழ்ச்சியடைகின்ற போதிலும் விவசாய செய்கையாளர்களின் வருமானம் அதிகரிப்பது ஏன் என்பதனை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக? **(4 புள்ளிகள்)**

04.

i. ‘‘குறைந்து செல்லும் விளைவு விதி’’ என்பதனை வரையறை செய்து அவ்விதி எவ்வாறு நிறுவனத்தின் செலவுகளை பாதிக்கும் என்பதனையும் தெளிவுபடுத்துக?

**(04 புள்ளிகள்)**

ii. A என்ற நிறுவனத்தின் வெளியீடு ஒரு (1) அலகாக இருக்கும்போது எல்லைச்செலவு ரூ. 60 ஆகவும் மொத்த நிலையான செலவு ரூ. 120 ஆகவும் காணப்பட்டது. வெளியீடு 5 அலகாக இருக்கும்போது மொத்த மாறும் செலவு ரூ. 110 ஆகக் காணப்பட்டது. 5வது அலகு வெளியீட்டிற்குரிய,

a. சராசரி மொத்தச் செலவு **(02 புள்ளிகள்)**

b. எல்லைச்செலவு **(01 புள்ளி)**

c. சராசரி நிலையான செலவு **(01 புள்ளி)**

என்பவற்றைக் காண்க.

iii. நிறைபோட்டிச் சந்தையிலிருந்து தனியுரிமைப் போட்டிச் சந்தையை வேறுபடுத்துக.

**(04 புள்ளிகள்)**

iv. நிறைபோட்டி நிறுவனமொன்று X என்ற பண்டத்தினை ரூபா 50 விலையில் 400 அலகுகளை விற்பனை செய்கின்றது. அந்நிறுவனத்தின் மொத்தச் செலவு 25000 ரூபாவாகும். அந்நிறுவனத்தின் வெளியீடு பூச்சியமாகவுள்ள போது மொத்தச் செலவு 6000 ரூபாவாகும் எனவும் கருதுக. இந்நிறுவனம் தொடர்ந்தும் X பண்டத்தினை நிரம்பல் செய்ய முடியுமா? விளக்குக?

**(04 புள்ளிகள்)**

v) உற்பத்திக் காரணியொன்றின் நிரம்பல் நெகிழ்ச்சியுள்ளதிலிருந்து நிரம்பல் நெகிழ்ச்சியற்றதாக மாற்றமடையும் போது மாற்றுக்கட்டணம், பொருளியல் வாடகையில் ஏற்படும் மாற்றங்களை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

**(04 புள்ளிகள்)**

05.

i. பொருளாதார பரப்பொன்றின் தொழிற்படும் ஐந்து வகையான நிறுவன அலகுகளையும் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணத்தினையும் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

ii. தேசிய கணக்கீட்டில் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படை விலை, கொள்வனவாளர் விலை ஆகியவற்றை வேறுபடுத்துக?

**(04 புள்ளிகள்)**

iii. ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானத்திலிருந்து தனி நபர் வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்காக கழிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

**(04 புள்ளிகள்)**

iii. ஒரு நாட்டின் தேசிய கணக்கு தொடர்பான புள்ளிவிபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.
(பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| • தனியார் நுகர்வு | 8000 |
| • பொது நுகர்வு | 7000 |
| • மொத்த உள்நாட்டு மூலதனாக்கம் | 4000 |
| • இருப்பு மாற்றம் | 200 |
| • பொருட்களின் தேறிய ஏற்றுமதி | -2200 |
| • பொருட்களின் இறக்குமதி | 6700 |
| • தேறிய நேரில் வரி | 600 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மைவருமானம் | - 400 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறைமாற்றல்கள் | 600 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக
அ. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி.

**(02 புள்ளிகள்)**

ஆ. செலவிடத்தக்க தேசிய வருமானம்.

**(02 புள்ளிகள்)**

இ. மொத்த உள்நாட்டுச் சேமிப்பு.

**(02 புள்ளிகள்)**

ஈ. வெளிநாட்டு தேறிய முதலீடு.

**(01 புள்ளி)**

"ஆ"

06.

i. திறந்த பொருளாதாரத்தின் சமநிலையை வரைபடத்தின் மூலம் விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. அரச செலவுப் பெருக்கி ($K_G$), வரிப்பெருக்கி ($K_T$) மற்றும் சமநிலை வரவு செலவுத் திட்டப் பெருக்கி ($K_B$) என்பவற்றை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. கருதுகோள் பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் வருமாறு?

| | | |
|---|---|---|
| மொத்த தேசிய வருமானம் | (Y) | = 8000 பில்லியன் ரூபா |
| செலவிடத்தக்க தேசிய வருமானம் | ($Y_d$) | = 7400 பில்லியன் ரூபா |
| தனியார் நுகர்வு | (C) | = 7100 பில்லியன் ரூபா |
| அரச பாதீட்டுப் பற்றாக்குறை | ($B_D$) | = 200 பில்லியன் ரூபா |
| அரச நடப்பு மாற்றல்கள் | ($T_R$) | = 50 பில்லியன் ரூபா |
| வர்த்தக மீதி | (TB) | = -300 பில்லியன் ரூபா |

இப் பொருளாதாரத்தின்
அ) அரசின் வரி வருமானம் (T)
ஆ) தனியார் முதலீடு (I)
எவ்வளவாகக் காணப்படும்?

**(04 புள்ளிகள்)**

iv. "வீக்க இடைவெளி" உருவாகும் பொருளாதாரத்தில் வெளியீட்டு இடைவெளி நேர்க்கணியமாகவா / எதிர்க்கணியமாகவா காணப்படும். பொருத்தமான வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

07.

i. “பண்டமாற்றுப் பொருளாதாரத்தின் குறைபாடுகளாலேயே பணம் உருவானதாக நம்பப்படுகின்றது. இக்கூற்றினை தெளிவுபடுத்துக.

**(04 புள்ளிகள்)**

ii. குறுகிய பண நிரம்பல் ($M_1$), திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_2b$) என்பவற்றை வேறுபடுத்துக.

**(04 புள்ளிகள்)**

iii. “உயர்வலுப்பணம்” என்பதனால் கருதப்படுவதென்ன? மத்தியவங்கியினால் எவ்வாறு உயர்வலுப்பணம் உருவாக்கப்படலாம் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

iv. பொருளாதாரமொன்றின் பண நிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

**(04 புள்ளிகள்)**

v. பணத்தின் அளவின் வளர்ச்சியும் பணவீக்கமும் நெருங்கிய ரீதியில் ஏன் தொடர்புபட்டுள்ளதென்பதைப் பரிமாற்றச் சமன்பாட்டினைப் (பிஷரது சமன்பாடு) பயன்படுத்தி விளக்குக.

**(04 புள்ளிகள்)**

08. i. இலங்கை மத்திய வங்கியின் அடிப்படைத் தொழிற்பாடுகள் ஆறினை (06) குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

ii. மத்திய வங்கியானது பணநிரம்பலைக் குறைக்க விரும்புவதாகக் கருதுக. இதன்பொருட்டு அது கையாளக்கூடிய கருவிகளையும் அக்கருவிகள் குறிப்பிட்ட நோக்கத்தை அடைய எவ்வாறு உதவும் என்பதனையும் விவரிக்குக.

**(04 புள்ளிகள்)**

iii. வணிக வங்கிகளின் குறிக்கோள்களை குறிப்பிட்டு அவற்றினை அடைவதற்கு வணிக வங்கி தன் சொத்துக் கட்டமைப்பினை எவ்வாறு கையாளும் என்பதனையும் சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

iv. வணிக வங்கிகளின் கடனாக்கச் செயன்முறையை எளிய உதாரணத்தின் மூலம் விளக்குக.

**(05 புள்ளிகள்)**

09.

i. சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பிரதான பொருளியல் தொழிற்பாடுகளை கூறுக.

**(04 புள்ளிகள்)**

ii. “சந்தைத் தோல்வி” என்றால் என்ன? அதற்குரிய நான்கு காரணிகளை குறிப்பிடுக?

**(04 புள்ளிகள்)**

iii. தூய பொதுப்பொருள் என்றால் என்ன? இவற்றை ஏன் சந்தை முறைக்கூடாக வழங்க முடியாதுள்ளது?

**(04 புள்ளிகள்)**

iv. நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு என்றால் என்ன? தனிநபர் ஒருவர் நேர்க்கணிய வெளிவாரி விளைவை ஏற்படுத்தும் நுகர்வில் ஈடுபடும் போது ஏன் வள ஒதுக்கீட்டில் வினைத்திறன் ஏற்படுவதில்லை என்பதனை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

**(04 புள்ளிகள்)**

v. பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

அ. உத்தம உற்பத்தி. **(02 புள்ளிகள்)**

ஆ. அரச தோல்வி. **(02 புள்ளிகள்)**

10. i. அரசின் நடைமுறைச் செலவு, மூலதனச் செலவு என்பவற்றை வேறுபடுத்துக.

**(06 புள்ளிகள்)**

ii. 2020ம் ஆண்டின் இலங்கை அரசின் நடைமுறைச் செலவுக்கட்டமைப்பினைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

iii. நேர்வரி, நேரில் வரி என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தி அவை ஒவ்வொன்றுக்கும் இவ்விரண்டு உதாரணங்களையும் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

iv. சிறந்த வரியொன்றில் காணப்படும் பண்புகளைக் குறிப்பிட்டு அதில் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**